ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ பெடையடர்த்த ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பெடையடர்த்த ॥

## திருநறையூர் - 6

‡பெடையடர்த்த மடவன்னம்⋆ பிரியாது⋆ மலர்க் கமலம்
மடல் எடுத்து மது நுகரும்⋆ வயல் உடுத்த திருநறையூர்⋆
முடையடர்த்த சிரம் ஏந்தி⋆ மூவுலகும் பலி திரிவோன்⋆
இடர் கெடுத்த திருவாளன்⋆ இணையடியே அடை நெஞ்சே! (1)

கழியாரும் கன சங்கம்⋆ கலந்தெங்கும் நிறைந்தேறி⋆
வழியார முத்தீன்று⋆ வளம் கொடுக்கும் திருநறையூர்⋆
பழியாரும் விறல் அரக்கன்⋆ பரு முடிகள் அவை சிதற⋆
அழல் ஆறும் சரம் துரந்தான்⋆ அடியிணையே அடை நெஞ்சே! (2)

சுளை கொண்ட பலங்கனிகள்⋆ தேன் பாய⋆ கதலிகளின்
திளை கொண்ட பழம் கெழுமுத்⋆ திகழ் சோலைத் திருநறையூர்⋆
வளை கொண்ட வண்ணத்தன்⋆ பின் தோன்றல்⋆ மூவுலகோ-
டளை வெண்ணெய் உண்டான் தன்⋆ அடியிணையே அடை
நெஞ்சே! (3)

துன்றோளித் துகில் படலம்⋆ துன்னி எங்கும் மாளிகைமேல்⋆
நின்றார வான் மூடும்⋆ நீள் செல்வத் திருநறையூர்⋆
மன்றாரக் குடம் ஆடி⋆ வரையெடுத்து மழை தடுத்த⋆
குன்றாரும் திரள் தோளன்⋆ குரை கழலே அடை நெஞ்சே! (4)

அகிற்குறடும் சந்தனமும்⋆ அம் பொன்னும் அணி முத்தும்⋆
மிகக் கொணர்ந்து திரையுந்தும்⋆ வியன் பொன்னித் திருநறையூர்⋆
பகல் கரந்த சுடர் ஆழிப்⋆ படையான் இவ்வுலகேழும்⋆
புகக் கரந்த திரு வயிற்றன்⋆ பொன்னடியே அடை நெஞ்சே! (5)

பொன் முத்தும் அரியுகிரும்⋆ புழைக் கை மா கரிக் கோடும்⋆
மின்னத் தண் திரையுந்தும்⋆ வியன் பொன்னித் திருநறையூர்⋆

மின்னொத்த நுண் மருங்குல்⋆ மெல்லியலைத்⋆ திரு மார்பில்
மன்னத் தான் வைத்துகந்தான்⋆ மலர் அடியே அடைநெஞ்சே! (6)

சீர் தழைத்த கதிர்ச் செந்நெல்⋆ செங்கமலத் திடையிடையின்⋆
பார் தழைத்துக் கரும்போங்கிப்⋆ பயன் விளைக்கும் திருநறையூர்⋆
கார் தழைத்த திருவுருவன்⋆ கண்ண பிரான் விண்ணவர் கோன்⋆
தார் தழைத்த துழாய் முடியன்⋆ தளிர் அடியே அடை நெஞ்சே! (7)

குலையார்ந்த பழுக் காயும்⋆ பசுங்காயும் பாளை முத்தும்⋆
தலையார்ந்த இளங்கமுகின்⋆ தடஞ்சோலைத் திருநறையூர்⋆
மலையார்ந்த கோலம் சேர்⋆ மணி மாடம் மிக மன்னி⋆
நிலையார நின்றான் தன்⋆ நீள் கழலே அடை நெஞ்சே! (8)

மறையாரும் பெரு வேள்விக்⋆ கொழும் புகை போய் வளர்ந்தெங்கும்⋆
நிறையார வான் மூடும்⋆ நீள் செல்வத் திருநறையூர்⋆
பிறையாரும் சடையானும்⋆ பிரமனும் முன் தொழுதேத்த⋆
இறையாகி நின்றான் தன்⋆ இணையடியே அடை நெஞ்சே! (9)

‡திண் கனக மதிள் புடை சூழ்⋆ திருநறையூர் நின்றானை⋆
வண் களக நிலவெறிக்கும்⋆ வயல் மங்கை நகராளன்⋆
பண்கள் அகம் பயின்ற சீர்ப்⋆ பாடல் இவை பத்தும் வல்லார்⋆
விண்கள் அகத்திமையவராய்⋆ வீற்றிருந்து வாழ்வாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥